செய்தி வெளியீடு எண்:979 நாள்:29.10.2021

<u>செய்தி வெளியீடு</u>

## தீபாவளி பண்டிகை நியாயவிலைக் கடைகளின் வேலை நேரம் அதிகரிப்பு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வரும் நவம்பர் 01–ஆம் தேதி முதல் 03–ஆம் தேதி வரை காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை நியாயவிலைக் கடைகளை திறந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. அதன்படி தீபாவளி பண்டிகைக்கு முன்னதாகப் பொருட்களை வாங்க விரும்பும் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் அனைத்தும் நவம்பர் 1, 2 மற்றும் 3–ஆம் தேதிகளில் காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தீபாவளிக்கு முன்னதாக பொருட்களை வாங்க இயலாதவர்கள் வழக்கம் போல் பண்டிகை முடிந்த பிறகு நவம்பர் 7–ஆம் தேதி முதல் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டல இணைப்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9